விவசாயியும் தரித்திர கடவுளும்

ஒரு ஜப்பானிய வாய்மொழிக்கதை




ஒரு ஏழை விவசாயியும் அவன் குடும்பத்தினரும் தங்களுடன் வாழ்ந்துவரும் தரித்திர கடவுளிடமிருந்து தப்பிக்க திட்டமிட்டனர். விடியற்காலை கடவுள் தூங்கும்போது ஓடிவிட்டால் தரித்திரத்திலிருந்து தப்பித்துவிடலாம் என்று நினைத்தனர்.

ஆனால் அந்த தரித்திர கடவுளிடம் இருக்கும் ஒரு அரிய செல்வம் அவர்களை போக விடாமல் செய்துவந்தது.

இந்த ஜப்பானிய வாய்மொழிக்கதையை *ரூத் வெல்* மனதை ஈர்க்கும் வகையில் *யோஷி*யின் சித்திரங்களின் துணையுடன் மொழிபெயர்த்திருக்கிறார்.
இந்தக் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால், நாம் எங்கெல்லாமோ தேடி அலையும் பொருள் நமக்கு அருகிலேயே இருந்தாலும் நாம் பல சமயங்களில் அதை காண்பதில்லை என்பதைத் தான்.

விவசாயியும் தரித்திர கடவுளும்

ஒரு ஜப்பானிய வாய்மொழிக்கதை



முன்னொரு காலத்தில், ஜப்பான் நாட்டின் மலைப்பகுதியில் ஒரு ஏழை விவசாயி தனது குடும்பத்துடன் வசித்து வந்தார்.
கடினமாக உழைக்க உழைக்க, மேலும் மேலும் ஏழையாகிறோமே என்று வருத்தப்பட்டார்.
ஆனால் உண்மையில், அவர் எப்போதும் கனவுலகில் தான் இருந்தார், ஒருபோதும் கடினமாக உழைத்ததில்லை.




வறுமை அதிகரித்தவுடன், தனது குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாக அவர் நினைத்தார். இதுவும் உண்மை இல்லை. அவருக்கு நான்கு குழந்தைகள் மட்டுமே இருந்தன. ஆனால் குழந்தைகளின் ஆட்டமும், ஓட்டமும், சண்டையும், சச்சரவும் நிறைய குழந்தைகள் இருப்பது போல தோன்றியது. இதனால் விவசாயியும் அவரது மனைவியும் மிகவும் துன்பப்பட்டார்கள். ஒரு நாள் இரவு விவசாயி தன் மனைவியிடம், "நாம் இப்படி ஏழைகளாய் இருக்கிறோமே, நமது கடவுளும் தரித்திரனாய்த் தான் இருப்பாரோ?" என்று புலம்பினார். இந்த விஷயத்தில் விவசாயி உண்மையைத் தான் சொல்லிக்கொண்டிருந்தார். ஒரு தரித்திர கடவுள் அந்த குடிசையின் பரணில் குடியிருந்தார்.





கடவுள் என்றாலே இரக்கமுள்ளவராகத் தானே இருப்பார்! தரித்திர கடவுளும் அப்படித் தான்! அந்த விவசாயியின் குடும்பத்தை அவருக்கு பிடித்திருந்தது. ஒட்டடையும் தூசியும் மண்டிக்கிடந்த பரணிலிருந்து, குழந்தைகளின் விளையாட்டுச் சத்தத்தைக் கேட்பதும் அவருக்குப் பிடித்திருந்தது. ஆனால் அவரை தொழாமல் இருப்பது நல்லது. ஏனென்றால் தரித்திர கடவுளான பிம்போகாமி, துரதிர்ஷ்டத்தைத் தான் தருவார். பிம்போகாமி ஒருவரிடம் ஒட்டிக்கொண்டால் , அந்த நபர் ஒருபோதும் பணக்காரராக முடியாது என்பது அனைவருக்கும் தெரியும்.

விவசாயியின் மனைவி “நீங்கள் சொல்வது சரிதான் . நாம் வேறு எங்காவது சென்றால், நமது வாழ்க்கை மேம்படும், கொஞ்சம் முன்னேற்றம் இருக்கும். தரித்திர கடவுள் தூங்கும்போது, அவருக்கு தெரியாமல் நள்ளிரவில் இங்கிருந்து போய்விடுவோம். அவரிடமிருந்தும் நமது துரதிர்ஷ்டத்திலிருந்தும் விடுபடுவோம். " என்று சொன்னாள். விவசாயி மனைவியை அணைத்துக்கொண்டார். தாம் ஏழையாக இருப்பதன் காரணம் தன் தவறல்ல என்று தெரிந்து கொண்டதாக குதியாட்டம் போட்டார். "அருமையான யோசனை. மலை உச்சியில் சூரியன் உதிப்பதற்கு முன்பு, நாம் அதிகாலையில் கிளம்பிவிடலாம்"என்று அவர் கூறினார்.




அவர்கள் தங்கள் உடமைகளை ஒரு பையில் கட்டிக் கொண்டனர். பின்னர் மெத்தையை விரித்து இருவரும் தூங்க முயன்றனர். சோம்பேறி விவசாயி ஏழை கடவுளிடமிருந்து விடுபட்ட பிறகு அவரது வாழ்க்கை எப்படி இருக்கும் என்று கற்பனை செய்யத் தொடங்கினார். ஒருவேளை தனக்கு ஒரு பெரிய தோட்டத்தில் கண்காணிப்பாளர் வேலை கிடைக்கும். பணியாளர்களுக்கு வேலை பிரித்துக் கொடுப்பார். அல்லது அவர் சாமுராய் என்னும் ஒரு துணிச்சலான, விசுவாசமான போர்வீரராக மாறி பண்ணையாரின் குடும்பத்தையும் நிலத்தையும் பாதுகாப்பார். இப்படி எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய கனவில் திளைத்ததனால் விவசாயி தூங்க முடியவில்லை. மனைவியின் தூக்கம் கெட்டு விடக்கூடாது என்பதற்காக சத்தம் போடாமல் எழுந்து வெளியே வந்தார்.

குடிசையின் வாசலில் ஒரு ஆள் நிலவொளியில் செருப்புகள் தயாரித்துக் கொணடிருப்பதைப் பார்த்தார்."யார் நீங்கள்? இங்கே என்ன செய்கிறீர்கள்? ”என்று விவசாயி கேட்டார்.

"நான் உன் வீட்டு பரணில் வாழும் தரித்திர கடவுள். நீ வேறு கிராமத்திற்கு போகிறாய் என்று காதில் விழுந்தது. அதனால்தான் உன் பயணத்திற்கு நான் செருப்புகளை உருவாக்குகிறேன். “

இதைக் கேட்ட விவசாயி தனது கால்களை உதைத்துக்கொண்டு ஓவென்று ஓலமிட்டதில், அவரது மனைவி எழுந்து விட்டாள்."அடியே, இது நமது கடவுள். நாம் இங்கிருந்து போகிறோம் என்று தெரிந்து நம்மை பின்தொடர நினைக்கிறார். அவரிடமிருந்தும் நம் துரதிர்ஷ்டத்திலிருந்தும் ஒருபோதும் தப்பிக்க முடியாது! " புலம்பினார் விவசாயி. மனைவி அவரை ஆறுதல்படுத்த முயன்றாள். ஆனால் எந்த பயனும் இல்லை. அவர் இரவு முழுவதும் புலம்பிக் கொண்டே இருந்தார்.





தரித்திர கடவுள் விடிகாலை வரை செருப்புகளை உருவாக்கி அவர்களுக்காக காத்திருந்தார். வைக்கோல் புல்லினால் பின்னிய செருப்புகள் வேகமாக தேய்ந்துவிடும் என்பதால் அவர் ஆறு ஜோடி செருப்புகளை உருவாக்கியிருந்தார். பயணம் கைவிடப்பட்ட போதிலும், தரித்திர கடவுள் செருப்புகளை பின்னிக் கொண்டே இருந்தார்.

ஒரு கட்டு வைக்கோலை எடுத்து, பயனுள்ள செருப்புகளை தயாரிப்பது ஒரு நல்ல பணி என்று அவர் கருதினார். அன்று, விவசாயியின் குழந்தைகள் நடுநடுவில் விளையாடுவதை நிறுத்திவிட்டு, தரித்திர கடவுள் செருப்பு பின்னுவதை பார்த்தார்கள். அமைதியாக கவனித்த குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஜோடி செருப்புகளை உருவாக்கினார்.

இரவு பகலாக அந்த தரித்திர ஆண்டவன் வீட்டின் அருகே அமர்ந்து செருப்புகளைத் தயாரித்துக் கொண்டிருந்தார். மறுநாள் காலையில் பன்னிரண்டு ஜோடி செருப்புகள் தயாராகிவிட்டன. அவர் அந்த செருப்புகளை வீட்டின் கூரையிலிருந்து அழகாக தொங்கவிட்டார்.

அடுத்த நாள் அவர் ஓரிடத்தில் கருஞ்சிவப்பாயிருந்த புல்லை கண்டார். விவசாயியின் மஞ்சள் நெல் புல்லுடன் கருஞ்சிவப்பு புல் கலந்து செருப்புகளை பின்னியபோது, செருப்புகள் மிகவும் அழகாக இருந்தன





இப்படி பல நாட்கள் கழிந்தன.விவசாயியும் அவரது மனைவியும் வெறுத்துப்போய் விட்டார்கள். குழந்தைகள் ஆரவாரமாய் விளையாடிக்கொண்டே இருந்தார்கள்.தரித்திர கடவுள் செருப்புகளை உருவாக்கிக்கொண்டே இருந்தார்.

இந்த செருப்புகள் அனைத்தும் விவசாயியின் வயலில் விளைந்த நெற்கதிரிலிருந்து தயாரிக்கப்பட்டு வலுவாக இருந்தன. இந்தப் புல்லுக்கு கருநீல வண்ணம் ஏற்ற முடியும் என்பதை அந்த தரித்திர கடவுள் கண்டுபிடித்தார். பிறகென்ன ! மஞ்சள், சிவப்பு மற்றும் நீல நிறங்களை கலந்து அழகான செருப்புகளை உருவாக்கினர்.

ஒரு நாள் கிராமவாசி ஒருவர் அந்த வழியே சென்று கொண்டிருந்தார். தரித்திர கடவுள் வேலை செய்து கொண்டிருப்பதை பார்த்து "ஐயா, நீங்கள் உருவாக்கும் செருப்புகள் மிகவும் அழகாக இருக்கின்றன."என்று பாராட்டினார். இதுபோன்ற அன்பான வார்த்தைகளைக் கேட்டிராத தரித்திர கடவுள்,"மிக்க நன்றி. என்னிடம் நிறைய செருப்புகள் உள்ளன. தயவுசெய்து நீங்கள் ஒரு ஜோடி எடுத்துக்கொண்டு இன்னொரு ஜோடியை உங்கள் மனைவிக்கு கொடுங்கள் என்றார். கிராமவாசி நன்றியுடன் செருப்புகளை எடுத்துச் சென்றார்.

அடுத்த வாரம், மற்றொரு கிராமவாசி குடிசையை கடந்து சென்றார். "ஐயா, என் பக்கத்து வீட்டுக்காரரிடமிருந்து உங்கள் செருப்புகளைப் பற்றி கேள்விப்பட்டேன். உங்கள் செருப்புகள் வலுவானவை மட்டுமல்ல, அழகாகவும் இருக்கின்றன என்று அவர் கூறினார்.

"நன்றி, ஐயா. உங்கள் மனைவி மற்றும் குழந்தைகளுக்காக இந்த செருப்புகளை எடுத்துக் கொள்ளுங்கள்."என்றார் தரித்திர கடவுள்.


இந்த உரையாடலைக் கேட்டு கொண்டிருந்த விவசாயியின் மனைவி கணவரிடம் போய் சொன்னாள். அவர் புலம்பிக்கொண்டிருப்பதை நிறுத்திவிட்டு வெளியே வந்து தரித்திர கடவுளிடம், “இந்த செருப்புகளை இலவசமாக கொடுக்க வேண்டாம். அதன் மதிப்பு ஒரு படி நெல் என்று சொல்லுங்கள்."என்றான்.

தரித்திர கடவுள் இது ஒரு நல்ல ஆலோசனை என்று ஒத்துக்கொண்டார்.

அடுத்த நாள் இரண்டு கிராமவாசிகள் அங்கு வந்தபோது, அவர்கள் செருப்புகளை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு படி நெல்லைக் கொடுத்துச் சென்றனர்.

மூன்றாவது நாளில், மற்றொரு கிராமவாசி ஒரு ஜோடி செருப்புகளை வாங்கினார். ஒரு படி நெல்லுக்கு பதிலாக, ஒரு கோழியை கொடுத்தார். இதையெல்லாம் வீட்டின் உள்ளே இருந்து பார்த்துக் கொண்டிருந்த விவசாயி இந்த செருப்புகள் அனைத்தையும் நான் கிராமத்திற்கு எடுத்துப் போனால், பல ஜோடிகளை விற்க முடியும் என்று நினைத்தார்.





மறுநாள் காலையில் விவசாயி மனைவி கட்டிவைத்த செருப்பு மூட்டையை முதுகில் சுமந்து சென்றார். அனறு இரவு வீடு திரும்பியபோது, சாப்பிட ஆறு கோழிகளையும், மனைவிக்கு சமைப்பதற்கான ஒரு புதிய பாத்திரத்தையும், குழந்தைகளுக்கு மிட்டாயகளும் வாங்கி வந்தார். ஒரு செருப்பு கூட மிச்சமில்லாமல், அனைத்தும் விற்றுவிட்டன.

"தரித்திர கடவுளே, இன்னும் நிறைய செருப்புகளை பின்னிக் கொடுங்கள்" என்று விவசாயி கேட்டுக் கொண்டார். "ஆகட்டும்,ஆனால் நீங்கள் உங்கள் நெல் வயலில் இருந்து நிறைய வைக்கோலை கொண்டு வர வேண்டும்" என்று கூறினார் தரித்திர கடவுள். அவர் சொன்னதை விவசாயியும் அவரது குடும்பத்தினரும் செய்தார்கள்.

விரைவில் அவர்கள் அனைவரும் வைக்கோல் வெட்டுவது, வெவ்வேறு வண்ணங்களை அதில் ஏற்றுவது, தரித்திர கடவுளுக்கு செருப்பு பின்ன உதவுவது மற்றும் செருப்புகளை கிராமத்திற்கு எடுத்துச் சென்று விற்பது என்று ஓயாது உழைத்தனர்.

வசதியான வாழ்க்கை பெற்றதைக்கூட கவனிக்க நேரமில்லாமல் அவர்கள் மும்முரமாக வேலை செய்தனர்.இப்போது வீட்டில் அனைவருக்கும் போதுமான உணவு இருந்தது, பட்டினி என்பதே கிடையாது. குழந்தைகள் பெற்றோருடன் பணிபுரியும் போது வயல்களில் உற்சாகமாக கத்திக்கொண்டு அங்கும் இங்கும் ஓடி விளையாடினர். ஆனால் அவர்கள் அதிக கூச்சல் போடுகிறார்கள் என்று யாரும் புகார் செய்யவில்லை. எப்போதும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் அவரது மனைவி, இப்போது வேலை செய்யும் போது ஜாலியாக பாட்டு பாடுகிறாள், வாய்விட்டு சிரிக்கிறாள்.





விவசாயியும் செருப்புகளையும் தயாரிக்க கற்றுக்கொண்டார். ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், ஒரு மந்தமான விவசாயி, செருப்புகளை உருவாக்கும் திறமையான கைவினைஞராக மாறிவிட்டார். அவர் பின்னிய அழகான செருப்புகளை காலில் போடவே மனம் வராது. பதிலாக, அவற்றை அலங்காரப் பொருளாக சுவரில் தொங்கவிடலாம்.

இந்த மாற்றங்கள் தரித்திர கடவுளுக்கு இன்னும் ஆச்சரியமாக இருந்தது. பெரும்பாலும் தரித்திர கடவுள் வயிறு ஒட்டி மெலிந்து பசியுடன் தான் இருப்பார். யாரும் அவரை நேசிப்பதில்லை, ஏனெனில் அவர் ஏழை என்பதால். ஆனால் இந்த தரித்திர கடவுள் கொஞ்சம் குண்டாகிவிட்டார். அவரது கிழிந்த உடைகள் தைக்கப்பட்டு விட்டன, தூசி படிந்த பரண் இப்போது சுத்தமாக இருந்தது. மிகவும் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், விவசாயியின் குடும்பம் இப்போது அவரை நேசிக்கத் தொடங்கி விட்டது.

அதிர்ஷ்டத்தின் கடவுளான ஃபுகுனோகாமி அந்த வீட்டிற்கு வர வேண்டிய நேரம் வந்துவிட்டதையும், தான் வேறு எங்காவது செல்ல வேண்டும் என்பதையும், அப்போது தான் விவசாயியின் குடும்பம் பெரிய பணக்காரர் ஆக முடியும் என்பதையும் தரித்திர கடவுள் அறிந்திருந்தார்.

ஷோகாட்சு என்பது ஜப்பானிய புத்தாண்டு தினம், மிக முக்கியமான பண்டிகை. இந்த ஆண்டு, ஷோகாட்சு வந்ததும், விவசாயியின் குடும்பத்தினர் தங்கள் சிறிய குடிசையை நன்றாக சுத்தம் செய்தனர். புதிய ஆண்டை வரவேற்க அவர்கள் ஒரு விருந்து வைத்தார்கள். புதிய ஆண்டில் தான் மிகப் பெரிய பணக்காரர் ஆகப் போவதாக விவசாயி உறுதியாக நம்பினார்.





புத்தாண்டு தின நள்ளிரவில், கோவிலின் பெரிய வெங்கல மணியை முழக்குவது என்பது ஜப்பானிய பாரம்பரியம். கோவில் பூசாரி அதை 108 முறை மெதுவாக அடிப்பார். இந்த மணியோசை காற்றில் பரவும்போது, மக்கள் தங்கள் வீடுகளின் கதவுகளைத் திறந்து புத்தாண்டை வரவேற்கிறார்கள்.

ஆனால் விவசாயியின் வீட்டில், மணி ஒலிக்க ஆரம்பித்தவுடன், தரித்திர கடவுள் குடும்பத்தினரிடம் விடைபெற்றுக்கொள்ள வந்தார். எல்லா நேரத்திலும் பாடிக்கொண்டிருக்கும் விவசாயியின் மனைவி அழுதாள். இப்போதெல்லாம் சண்டை என்பதே இல்லாமல், எப்போதும் பெற்றோரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் குழந்தைகள், தரித்திர கடவுளின் கால்களை கட்டிக் கொண்டு "நீங்கள் எங்களை விட்டு போகக் கூடாது" என்று கதறினார்கள்.

"நான் போக வேண்டும். நான் போகவில்லை என்றால், நீங்கள் ஒருபோதும் பணக்காரராக ஆக முடியாது. இதோ, என் இடத்தில் இங்கு வாழப்போகும் பணக்கார கடவுள் வந்துவிட்டார்". மெய்யாலுமே, பணக்கார கடவுள் வீட்டுக் கதவின் அருகே நின்று கொண்டிருந்தார். அவரது கொழுகொழு முகத்தில் ஒரு புன்னகை இருந்தது. அவர் மிக விலையுயர்ந்த ஆடைகள் அணிந்திருந்தார்.
தரித்திர கடவுளின் கையைப் பிடித்து இழுத்தார்."சீக்கிரம்! புத்தாண்டு வருவதற்கு முன்பு நீங்கள் வெளியேற வேண்டும். இப்போது இது எனது குடும்பம். நான் இவர்களை பணக்காரராக்க வந்திருக்கிறேன். "என்று கட்டளையிட்டார்.

பணக்கார கடவுள் தரித்திர கடவுளை ஒரு பக்கம் இழுக்க, விவசாயியின் குழந்தைகள் அவரை தங்கள் பக்கம் இழுத்தனர். யாரோ ஒரு குடம் தண்ணீரை விசிறி அடித்தார்கள். ஒரே அல்லோலகல்லோலம்! விவசாயி "நிறுத்துங்கள்" என்று கத்தினார். அனைவரும் அமைதியாகிவிட்டார்கள். மணியின் சத்தமும் விவசாயியின் வலுவான குரலும் மட்டுமே கேட்டன.அவர் சொன்னார்,
"நான் பெரிய பணக்காரனாக வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் இப்போதே நம் வீட்டில் சிரிப்பு இருக்கிறது, இசை இருக்கிறது. ஒவ்வொரு நாளும் நான் அழகான கலைப்பொருட்களை உருவாக்குகிறேன்.

நாம் ஏற்கனவே பணக்காரர்களாகிவிட்டோம்.“ விவசாயியின் பேசி முடிந்தவுடன், எல்லோரும் பணக்கார கடவுளை குடிசையிலிருந்து வெளியே தள்ளி கதவை மூடினர். கோயிலின் மணியோசை நின்றது. அனைவரும் தரித்திர கடவுளைத் கட்டித் தழுவினார்கள். தங்கள் நல்ல அதிர்ஷ்டத்தை கொண்டாட, அனைவரும் சுவையான விருந்து சாப்பிட அமர்ந்தனர்.






அடுத்த பல ஆண்டுகளாக, விவசாயியும் அவரது குடும்பத்தினரும் ஆயிரக்கணக்கான ஜோடி செருப்புகளை உருவாக்கினர். ஒவ்வொரு ஜோடி செருப்பும் அதற்கு முன் செய்யப்பட்டதை விட வித்தியாசமாகவும் அழகாகவும் இருந்தது. குழந்தைகள் வளர்ந்து திருமணம் செய்து கொண்டனர். பெற்றோருக்கு அருகிலேயே வீடுகளை கட்டிக்கொண்டார்கள். அவர்களது குழந்தைகள் முற்றத்தில் வெளியே விளையாடுவார்கள்.

ஒவ்வொரு புத்தாண்டின் போதும், விவசாயி தன் முழு குடும்பத்தையும் கூட்டிவைத்து செருப்புகளின் கதையையும், அவரது வீட்டு பரணில் வாழ்ந்த தரித்திர கடவுளையும் பற்றி அவர்களுக்குச் சொல்வார். "தரித்திர கடவுளின் கருணை மட்டும் கிடைக்காமல் இருந்திருந்தால் நமக்கு என்ன நேர்ந்திருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை!”

தரித்திர கடவுள் அதன்பின் அதிகம் பேசுவதில்லை. விவசாயியின் குடும்பத்தினருக்கு அவரது குரலே மறந்து போய்விட்டது. மிகவும் கூச்சப்பட்டுக்கொண்டு, குடும்பத்தினர் முன் அவர் வருவதே இல்லை. அவர் காணாமல் போய்விட்டாரோ?. தெரியாது. ஆனால் அவர் அங்கு இல்லை!

ஒரு அரிய பறவையின் பாடலைப் போலவே, சில கணங்கள் மட்டுமே கேட்கப்படும் பாட்டு அவர். அந்த பாடலை மீண்டும் மீண்டும் கேட்க எல்லா முயற்சிகளையும் செய்தாலும், அடிக்கடி கேட்க முடியாது.

உண்மையில் பறவை பாடுகிறதா அல்லது அந்த பாடல் மனதின் கற்பனையா ?



முற்றும்